ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2133/41 - 2019 ජූලි මස 24 වැනි බදාදා - 2019.07.24

*2133/41 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### சப்பிரகமுவ மாகாண மாகாண சபை

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆறாவது மாகாண சபையின் பதவிக்காலம் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியுடன் முடிவடைந்தமையினால் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 27(அ) பிரிவின்படி எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் உத்தரவளித்தல்**

*2019 நிதியாண்டின் சேவைச் செலவினங்களுக்காக ஏற்பாடு செய்வதற்கும் அத்தகைய சேவைச் செலவினங்களுக்காக சப்பிரகமுவ மாகாணத்திற்குள் கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்த நிதியாண்டிற்குள் சப்பிரகமுவ மாகாண சபையின் சில முயற்சிகள் தொடர்பில் நிதி ஏற்பாடு செய்வதற்கும் அத்தகைய முயற்சிகளின் செலவினங்களுக்காக மேற்குறித்த நிதியாண்டிற்குள் தேவைப்படும் பணங்களை சப்பிரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணங்களாகச் செலுத்துவதற்கு இடமளிப்பதற்கும், சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திற்கு அப்பணத் தொகைகளை மீளச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் முற்கூறிய கருமங்களுடன் தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு கட்டளையாகும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர் ஆகிய என்னால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.*

*உத்தரவைப் பெற்றுக் கொடுத்தல்.*

*1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆறாவது (06) மாகாண சபையின் பதவிக்காலம் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியுடன் முடிவடைந்தமையினால் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 27(அ)ஆம் பிரிவின்படி எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியுடன் ஆரம்பமாகி 2019ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டிற்குள் சப்பிரகமுவ மாகாண சபையின் சேவைச் செலவினங்களுக்காகத் தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள முப்பத்தோராயிரத்து நூறு மில்லியன்*



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ரூபாவான (31,100,000,000 ரூபா) சப்பிரகமுவ மாகாண சபையின் செலவினங்களை, சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு அந்த மாகாணத்தின் பிரதான செயலாளருக்கும் கணக்கீட்டு அலுவலர்களுக்கும் இத்தால் உத்தரவளிக்கின்றேன்.

*2019 ஆம் நிதியாண்டிற்கான ஒதுக்கீடுகள்.*

2. (1) ஏதாவதொரு பணத் தொகையைச் செலவிடுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற வேறு சட்டமெதற்கும் பங்கமேற்படாமல் இக்கட்டளையில் '2019 நிதியாண்டு' எனக் குறிப்ப்பீடு செய்யப்படுகின்ற 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியுடன் ஆரம்பமாகி 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் கால எல்லையின் சேவைச் செலவினங்களுக்காகத் தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள முப்பத்தோராயிரத்து நூறு மில்லியன் ரூபாவான (31,100,000,000 ரூபா ) சப்பிரகமுவ மாகாண சபையின் செலவினங்களை :-

(அ) சப்பிரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணங்களாகச் செலுத்துவதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்ற கொடுப்பனவுகள் மூலமும் அத்துடன்,

(ஆ) சப்பிரகமுவ மாகாணத்திற்குள் கடன்களாகப் பெற்றுக் கொள்ளும் பணத்தொகையிலிருந்து அல்லது சப்பிரகமுவ மாகாண சபைக்காகப் பெற்றுக் கொள்வதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்ற கடன்களாகப் பெற்றுக் கொள்ளும் பணங்களிலிருந்து செலுத்தப்படல் வேண்டும். இங்கு மேலே குறிப்பிடப்பட்ட முப்பத்தோராயிரத்து நூறு மில்லியன் ரூபாவான (31,100,000,000 ரூபா) பணத்தொகை இக்கட்டளையின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் சப்பிரகமுவ மாகாண சபைக்காகவும் அது தொடர்பில் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அதிகாரமளிக்கப்படுகின்ற வேறு ஏதேனும் எழுத்து மூலமான சட்டத்திற்குப் பங்கமின்றிப் பயனுடையதாதல் வேண்டும்.

*2019 ஆம் நிதியாண்டிற்குள் சப்பிரகமுவ மாகாண சபையின் சில விவகாரங்கள் தொடர்பில் நிதி வழங்குதல்.*

3. (1) 2019 ஆம் நிதியாண்டிற்குள் இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் iv ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் சப்பிரகமுவ மாகாண சபை பெறும் vi ஆம் நிரையில் குறிப்பிடப்பட பெறுகைகள் அத்தகைய முயற்சியின் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு வரவு வைக்கப்பட்ட பெறுகைகளின் கூட்டு மொத்தத் தொகையானது vi ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லைக்குக் குறைவடையாதிருத்தல் வேண்டும். அவ்வாறு கிடைக்கும் தூய மேன்மிகை ஏதுமிருப்பின் அதை 2019 ஆம் நிதியாண்டு முடிவடைந்து ஆறு மாதங்கள் செல்வதற்கு முன் சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) 1 ஆம் உட்பிரிவின் கீழ் தூய மேன்மிகையைத் தீர்மானிக்கும் பணிக்காக கீழ்க் குறிப்பிடப்படும் கொடுப்பனவுகள் அதாவது:-

(அ) ஏதாவதொரு விவகாரத்தின் வருமானத்திற்குச் சேரவேண்டியதான முறைப்படி செலுத்தப்பட்ட அல்லது செலுத்த வேண்டியதாகவுள்ள அல்லது அவ்விவகாரத்தின் செயற்திறன் தாபித்தல் மற்றும் ஏனைய செலவினங்கள், அத்துடன்

(ஆ) ஏதாவதொரு விவகாரத்தின் அசைவுள்ள மற்றும் அசைவற்ற சொத்துக்கள் தொடர்பில் அதன் தேய்மானத்தை மேவுவதற்காக அந்த ஒவ்வொரு விவகாரத்தினதும் வருமானத்திலிருந்து குறைத்தல் வேண்டும்.

4. இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் iv ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சி தொடர்பிலும் 2019 ஆம் நிதியாண்டிற்குள் சப்பிரகமுவ மாகாண சபையினால் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் அந்த நிதியாண்டிற்குள் அத்தகைய முயற்சியின் மூலம் சப்பிரகமுவ மாகாண சபை பெறும் பெறுகைகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறாயினும் அச்செலவினங்கள் அந்த

அட்டவணையின் v ஆம் நிரையின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

5. இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் iv ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு முயற்சி தொடர்பில் 2019 ஆம் நிதியாண்டின் இறுதியில் நிலுவையாக உள்ள பற்று நிலுவைத் தொகையானது அந்த அட்டவணையின் vii ஆம் நிரையின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். மேலும் அத்தகைய கால எல்லையின் இறுதியில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புக்கள் viii ஆம் நிரையின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

*2019 ஆம் நிதி யாண்டிற்குள் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள முயற்சிகள் தொடர்பிலான செலவினங்களுக் காக சப்பிர கமுவ மாகாண சபையின் நிதியத் திலிருந்து அல்லது பணங் களிலிருந்து முற் பணம் செலுத்தல்.*

6. 2019 ஆம் நிதியாண்டிற்குள் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் iv ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு முயற்சியின் மூலம் சப்பிரகமுவ மாகாண சபை பெறும் பெறுகைகள் அத்தகைய முயற்சி தொடர்பில் சப்பிரகமுவ மாகாண சபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை நிவர்த்தி செய்வதற்குப் போதாமையாக இருப்பின் அத்தகைய செலவினங்களை நிவர்த்தி செய்வதற்காகவென ஆளுநர் அவர்களால் கருதப்படும் பணத்தொகைகளை சப்பிரகமுவ மாகாண நிதியத்திலிருந்து அல்லது முற்பணங்களாகச் செலுத்தப்படல் வேண்டுமென அவர்களால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படலாம், ஆயினும் அவ்வாறு கொடுக்கப்படும் முற்பணக் கணக்குகளின் கூட்டு மொத்தத் தொகையானது அந்த அட்டவணையின் v ஆம் நிரையின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய செலவின எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். மேற்கூறிய முயற்சி சார்பில் முற்பணங்களாக அவ்வாறு கொடுக்கப்பட்ட பணத்தொகைகள் எதுவும் என்னால் கட்டளையொன்றின் மூலம் விதிக்கப்படும் வகையில் சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திற்கு மீளச் செலுத்தப்படல் வேண்டும்.

*நிகழ்ச்சித்திட்டம் மீண்டுவரும் செலவினங்களுக் காக ஒதுக்கப்பட் டிருந்த போதிலும் செலவிடப்படாத பணத் தொகை களை அந்த நிகழ்ச்சித் திட்டத்திலேயே ஏனையவொரு ஒதுக்கத்திற்கு அல்லது அத் தலைப்பின் கீழான ஏனைய வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாற்றம் செய்யும் அதிகாரம்.*

7. (1) இக்கட்டளையின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டு வரும் செலவினங்களுக்கு அந்த அட்டவணையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒதுக்கப்பட்டுள்ள ஆனால் செலவு செய்யப்படாத அல்லது எதிர்காலத்திலும் செலவாகாதென எதிர்பார்க்கக் கூடிய ஏதாவதொரு பணத்தொகை அந்நிகழ்ச்சித் திட்டத்திலேயே ஆக்கப்பொருட் செலவினங்களாக அல்லது ஏனையவொரு நிகழ்ச்சித் திட்டத்தின் மீண்டுவரும் அல்லது ஆக்கப்பொருட் செலவினங்களாக பகிர்வதற்கு பிரதான செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவராயினுமொரு உத்தியோகத்தரின் கட்டளைப்படி மாற்றப்படலாம்.

(2) இக்கட்டளையின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ள ஆக்கப்பொருள் செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்டவொரு பணத்தொகை அந்த தலைப்பின் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அல்லது கருத்திட்டத்திற்கு வெளியே மாற்றம் செய்யும் நடவடிக்கை பிரதான செயலாளரால் மாத்திரம் மேற்கொள்ளப்படலாம்.

8. (1) அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களை மேற்கொள்வதற்கு வரிகள் மற்றும் ஏனைய மூலங்களிலிருந்து பெறும் பெறுகைகள், எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகைகளை விடக் குறைவடையலாம் என்பதற்கு; அல்லது.

(2) ஏதாவதொரு குறிப்பிட்ட பணிக்காக அல்லது பணிகளுக்காக முதலில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாதென ஆளுநர் திருப்தியடையும் சந்தர்ப்பமொன்றில்;

சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழ் செலவிடுவதற்காக முன்னர் விடுவிக்கப்பட்ட பணத்தொகைகள் முழுமையாக ஆளுநர் அவர்களால் நீக்கிக் கொள்ளப்படலாம்.

இக் கட்டளையின் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய மற்றும் ஆகக் குறைந்த எல்லை களை மாற்றம் செய்தல் தொடர்பில் ஆளுநரருக்கு உள்ளஅதிகாரம்.

9. ஆளுநர் அவர்களால்.-

(அ) இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் v ஆம் vii ஆம் மற்றும் viii ஆம் நிரல்களில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும்.

(ஆ) இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் vi ஆம் நிரையில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைகளுள் எதனையும்,

கட்டளைகள் மூலம் 2020 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் வேறுபடுத்தப்படலாம் அல்லது மாற்றப்படலாம்.

இப்பிரிவின் கீழ் இடப்படும் கட்டளைகள் எதுவும் ஆளுநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி செல்லுபடியற்றதாதல் வேண்டும்.

அத்தகைய கட்டளையொன்று எத்தினத்தில் இடப்படுகின்றதோ அத்தினத்திற்கு முன்னரானவொரு தினத்திலிருந்து அது செல்லுபடியாதல் வேண்டுமென அதில் கூறப்பட்டே குறிப்பிடப்பட்டிருக்குமாயின் அவ்வாறு கூறப்பட்டு குறிப்பிடப்படும் திகதி தொடக்கம் அது செல்லுபடியானதாகக் கருதப்படல் வேண்டும்.

10. ஆளுநர் அவர்களால், எழுத்து மூலமான கட்டளையொன்றின் மூலம் இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் பொருத்தமான நிரைகளுக்கு ஏதேனுமொரு முயற்சியை சேர்ப்பதன் மூலமும் அத்துடன் :-

(அ) அந்த முயற்சி தொடர்பிலான எல்லா ஆகக்கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் ஏதாவதொரு எல்லையையும்,

(ஆ) அத்தகைய முயற்சி தொடர்பிலான ஆகக்குறைந்த எல்லையையும் சேர்ப்பதன் மூலமும் அந்த அட்டவணை திருத்தப்படலாம்.

11. இந்த உத்தரவு சப்பிரகமுவ மாகாணத்தின் ஏழாம் (7) மாகாண சபைக் கூட்டம் நடத்துவதற்காக அழைக்கப்படும் தினத்தில் அல்லது மாகாண சபையின் பணிகளை மீள ஆரம்பிக்கும் திகதியில் அல்லது திகதியில் இருந்து மூன்று (3) மாத காலஎல்லை முடிவடையும் தினத்தில் அல்லது 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி அல்லது அவ்விரு தினங்களுள் முதலில் வரும் திகதியில் முடிவடையும்.

## முதலாம் அட்டவணை

*மாகாண சபை பொது சேவைகளுக்காக செலுத்தப்பட வேண்டிய பணத்தொகைகள்*
*தலைப்பு இல. 800 தொடக்கம் 861 வரை*

| | |
|---|---|
| *மீண்டுவரும் செலவினங்கள்* | *27,685,000,000* |
| *மூலதனச் செலவினங்கள்* | *3,415,000,000* |
| *மொத்தம்* | *31,100,000,000* |

| *தலைப்பு* | *தாபனம் மற்றும் நிகழ்ச்சித் திட்டம்* | *மீண்டுவரும் செலவினங்கள் ரூபா* | *மூலதனச் செலவினங்கள் ரூபா* |
|---|---|---|---|
| 800 | கௌரவ ஆளுநர் அவர்களின் அலுவலகம் | 83,316,000 | 4,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிருவாகம் | | |
| 801 | மாகாண சபைச் செயலகம் | 141,686,000 | 500,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | | |
| 802 | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | 20,346,000 | 500,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | | |
| 803 | கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு | 10,996,000 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | | |
| 804 | பிரதான செயலாளர் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 329,101,500 | 535,000,000 |
| 805 | பிரதிப் பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) | 32,398,000 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | | |
| 806 | பிரதிப் பிரதான செயலாளர் (நிதி முகாமை) | 48,759,000 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | | |
| 807 | பிரதிப் பிரதான செயலாளர் (திட்டமிடல்) | 48,622,000 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | | |
| 808 | பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியற் சேவைகள்) | 251,825,015 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 50 நிர்மாண மற்றும் தெருக்களைப் பராமரித்தல் | | |
| 809 | மாகாண வருமானத் திணைக்களம் | 68,701,500 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | | |
| 810 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார, உள்நாட்டு வைத்தியம், மகளிர் விவகாரம், கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல் ஊடக, வீடமைப்பு, நிர்மாணத் துறை மற்றும் சமய விவகார அமைச்சு | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 158,936,000 | 4,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 47 போக்குவரத்து சேவைகள் | 10,000,000 | 39,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 49 மின் சக்தி மற்றும் வலு சக்தி சேவைகள் | | 28,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 53 கூட்டுறவு அபிவிருத்தி | | 11,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 60 சமூக அபிவிருத்தி | | 170,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 61 வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி | 2,273,900 | 25,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 63 தோட்ட அடிப்படை வசதிகள் மற்றும் தோட்ட வீடமைப்பு | | 47,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 71 வைத்தியசாலை சேவைகள் | | 415,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 72 பொது சுகாதார சேவைகள் | | 102,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 73 உள்நாட்டு சுகாதார சேவைகள் | | 91,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 93 சமய மற்றும் கலாசார அமைச்சு | | 24,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 96 மகளிர் அபிவிருத்தி | | 9,000,000 |

| தலைப்பு | தாபனம் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் | மீண்டுவரும் செலவினங்கள் ரூபா | மூலதனச் செலவினங்கள் ரூபா |
|---|---|---|---|
| 811 | சுகாதார திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 224,454,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 71 வைத்தியசாலைச் சேவைகள் | 6,107,125,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 72 பொது சுகாதார சேவைகள் | 1,169,420,000 | |
| 812 | ஆயுர்வேத திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 73 உள்நாட்டு சுகாதாரச் சேவைகள் | 512,753,100 | |
| 813 | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 53 கூட்டுறவு அபிவிருத்தி | 90,469,800 | |
| 814 | உள்ளூராட்சித் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 60 சமூக அபிவிருத்தி | 2,261,598,000 | |
| 820 | மாகாண தெருக்கள் அபிவிருத்தி, கிராமிய அடிப்படை வசதிகள், உல்லாசப் பிரயாணத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 56,665,000 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 50 நிர்மாண மற்றும் தெருக்களைப் பராமரித்தல் | 600,000,000 | 433,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 52 பிரதேச அபிவிருத்தி | | 20,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 90 உல்லாச விவகாரங்கள் விளையாட்டுத்துறை | | 120,000,000 |
| 821 | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 90 உல்லாச விவகாரங்கள் விளையாட்டுத் துறை | 70,221,000 | |
| 830 | சமூக நலன்புரி நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 45,152,170 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 51 கைத்தொழில் அபிவிருத்தி | | 74,500,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 60 சமூக அபிவிருத்தி | 29,327,000 | 125,500,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 95 சமூகப் பாதுகாப்பு | | 117,000,000 |
| 831 | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 51 கைத்தொழில் அபிவிருத்தி | 138,667,000 | |
| 832 | நன்னடத்தைகள் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 95 சமூகப் பாதுகாப்பு | 339,055,000 | |
| 840 | கல்வி- தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 108,149,160 | - |
| | நிகழ்ச்சித் திட்டம் 80 ஆரம்ப கல்வி | | 81,750,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 81 இரண்டாந்தரக் கல்வி | | 551,965,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 93 சமய மற்றும் கலாசார விவகாரங்கள் | 17,687,600 | 27,285,000 |
| 841 | கல்வித் திணைக்களம் | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 550,375,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 80 ஆரம்பக் கல்வி | 4,684,521,655 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 81 இரண்டாந்தரக் கல்வி | 8,792,484,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 87 கல்வி கற்றலை மேம்படுத்தல் | 27,165,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 88 கல்வி திட்டமிடல் நிர்வாகம் மற்றும் சேவைகள் வழங்கல் | 14,088,000 | |

| தலைப்பு | தாபனம் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் | மீண்டுவரும் செலவினங்கள் ரூபா | மூலதனச் செலவினங்கள் ரூபா |
|---|---|---|---|
| 850 | காணி, மாகாண நீர்ப்பாசனம், விவசாய, விலங்குற்பத்தி மற்றும் விலங்கு சுகாதார மற்றும் மீன்பிடி துறை அமைச்சு | | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | 47,187,800 | 25,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 40 காணி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி | | 12,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 43 நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமை | | 94,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 44 விவசாய அபிவிருத்தி | | 117,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 45 கால் நடை வள அபிவிருத்தி | | 87,000,000 |
| | நிகழ்ச்சித் திட்டம் 55 உணவுப் பாதுகாப்பினைப் பேணுதல் | | 24,000,000 |
| 851 | காணி ஆணையாளர் திணைக்களம் | 64,720,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 40 காணி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி | | |
| 852 | விவசாய திணைக்களம் | 224,610,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 44 விவசாய அபிவிருத்தி | | |
| 853 | விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதாரத் திணைக்களம் | 261,260,000 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 45 கால் நடை வள அபிவிருத்தி | | |
| 861 | மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் | 20,883,800 | |
| | நிகழ்ச்சித் திட்டம் 03 மாகாண நிர்வாகம் | | |
| | மொத்தம் | 27,685,000,000 | 3,415,000,000 |

## இரண்டாம் அட்டவணை

## மதிப்பீடுகள் - 2019

## முற்பணக் கணக்கு விவகாரங்கள்

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | விடய இலக்கம் | முற்பணக் கணக்கு வகை | செலவினங்களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | பற்று நிலுவையின் உச்ச எல்லை | வரவுகளின் உச்ச எல்லை |
| | கூட்டு மொத்தம் | | உப மொத்தம் | 1,879,900.00 | 781,890,000 | 4,159,548,000 | 3,900,000 |
| | மாகாண அரசாங்க உத்தியோகத்தர் களின் முற்பணக் கணக்குகள் | | மாகாண அ. உ. முற்பணம் | 1,750,950,000 | 708,850,000 | 4,122,308,000 | - |
| 1 | கௌரவ ஆளுநர் அவர்கள் | 80001 | மாகாண அ. உ. முற்பணம் | 2,000,000 | 700,000 | 6,926,000 | - |
| 2 | மாகாண சபைச் செயலகம் | 80101 | மாகாண அ. உ. முற்பணம் | 2,800,000 | 800,000 | 7,785,000 | - |
| 3 | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | 80201 | மாகாண அ. உ. முற்பணம் | 1,200,000 | 600,000 | 4,422,000 | - |
| 4 | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | 80301 | மாகாண அ. உ. முற்பணம் | 1,150,000 | 650,000 | 3578,000 | - |
| 5 | பிரதான செயலாளர் | 80401 | மாகாண அ. உ. முற்பணம் | 33,000,000 | 15,000,000 | 80,000,000 | - |
| 6 | பிரதி பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) | 80801 | மாகாண அ. உ. முற்பணம் | 30,000,000 | 8,000,000 | 82,000,000 | - |
| 7 | மாகாண வருமானத் திணைக்களம் | 80901 | மாகாண அ. உ. முற்பணம் | 6,000,000 | 2,500,000 | 13,000,000 | |
| 8 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி சுகாதார, உள்நாட்டு வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்கு வரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81001 | மாகாண அ. உ. முற்பணம் | 9,300,000 | 5,600,000 | 26,200,000 | - <br> - |
| 9 | சுகாதாரத் திணைக்களம் | 81101 | மாகாண அ. உ. முற்பணம் | 352,000,000 | 98,000,000 | 889,954,000 | |
| 10 | ஆயுர்வேத திணைக்களம் | 81201 | மாகாண அ. உ. முற்பணம் | 25,000,000 | 10,000,000 | 62,000,000 | - |
| 11 | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | 81301 | மாகாண அ. உ. முற்பணம் | 9,500,000 | 5,100,000 | 22,400,000 | - |
| 12 | உள்ளூராட்சி திணைக்களம் | 81401 | மாகாண அ. உ. முற்பணம் | 6,400,000 | 2,700,000 | 19,800,000 | - |
| 13 | மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய அடிப்படை வசதிகள், சுற்றுலாத்துறை, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | 82001 | மாகாண அ. உ. முற்பணம் | 3,500,000 | 1,500,000 | 12,000,000 | - <br> - |
| 14 | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் | 82101 | மாகாண அ. உ. முற்பணம் | 2,300,000 | 800,000 | 7,500,000 | - |

இரண்டாம் அட்டவணை (தொடர்ச்சி)

மதிப்பீடுகள் - 2019

## முற்பணக் கணக்கு விவகாரங்கள்

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | விடய இலக்கம் | முற்பணக் கணக்கு வகை | செலவினங்களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை | பற்று நிலுவையின் உச்ச எல்லை | வரவுகளின் உச்ச எல்லை |
| 15 | சமூக நலன்புரி, நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு | 83001 | மாகாண அ. உ. முற்பணம் | 9,200,000 | 4,950,000 | 30,250,000 | |
| 16 | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | 83101 | மாகாண அ. உ. முற்பணம் | 12,000,000 | 8,500,000 | 26,500,000 | |
| 17 | நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் | 83201 | மாகாண அ. உ. முற்பணம் | 9,000,000 | 4,500,000 | 25,000,000 | |
| 18 | கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார விவகார அமைச்சு | 84001 | மாகாண அ. உ. முற்பணம் | 9,500,000 | 3,000,000 | 24,500,000 | |
| 19 | கல்வித் திணைக்களம் | 84101 | மாகாண அ. உ. முற்பணம் | 1,177,000,000 | 510,000,000 | 2,667,043,000 | |
| 20 | காணி, மாகாண நீர்ப்பாசன, விவசாய,விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதார, மீன்பிடித் தொழில் அமைச்சு | 85001 | மாகாண அ. உ. முற்பணம் | 3,000,000 | 2,000,000 | 13,200,000 | |
| 21 | காணி ஆணையாளர் திணைக்களம் | 85101 | மாகாண அ. உ. முற்பணம் | 6,500,000 | 4,500,000 | 13,500,000 | |
| 22 | விவசாயத் திணைக்களம் | 85201 | மாகாண அ. உ. முற்பணம் | 26,000,000 | 11,000,000 | 58,000,000 | |
| 23 | விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதாரத் திணைக்களம் | 85301 | மாகாண அ. உ. முற்பணம் | 12,500,000 | 7,500,000 | 19,600,000 | |
| 24 | மாகாண உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் | 86101 | மாகாண அ. உ. முற்பணம் | 2,100,000 | 950,000 | 7,150,000 | |
| | மா. அ. உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் | உப மொத்தம் | | 128,950,000 | 73,040,000 | 37,240,000 | 3,900,000 |
| 25 | மாகாண சபைச் செயலகம் | 80102 | மாகாண சபை உறுப்பினர் களுக்கான பலவின முற் பணங்கள் | 26,400,000 | 2,100,000 | 24,000,000 | - |

இரண்டாம் அட்டவணை (தொடர்ச்சி)

மதிப்பீடுகள் - 2019

## முற்பணக் கணக்கு விவகாரங்கள்

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சுக்கள்/திணைக்களங்கள் | விடய இலக்கம் | முற்பணக் கணக்கு வகை | செலவினங் களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை | பற்று நிலுவையின் உச்ச எல்லை | வரவுகளின் உச்ச எல்லை |
| 26 | முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம் | 80502 | பயிற்சி நிலைய முற்பணக் கணக்குகள் | 12,000,000 | 5,000,000 | 1,500,000 | 200,000 |
| 27 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூ ராட்சி சுகாதார, உள்நாட்டு வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு நிர்மாணத் துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81002 | கணினிக் கருத்திட்டம் | 1,750,000 | 140,000 | 300,000 | 100,000 |
| 28 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி சுகாதார, உள்நாட்டு வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்துத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81003 | பின்னவல இப்பெரணிகம தொணிப்பொருள் பூங்கா முற்பணக் கணக்கு | 8,500,000 | 3,000,000 | 300,000 | 800,000 |
| 29 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி சுகாதார, உள்நாட்டு வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81004 | சப்பிரகமுவ மாகாண அரங்க மண்டப முற்பணக் கணக்கு | 4,000,000 | 2,000,000 | 200,000 | 200,000 |
| 30 | ஆயுர்வேத திணைக்களம் | 81202 | பின்னவல பஞ்ச கர்ம வைத்திய நிலையத்தை தாபித்தல் | 2,800,000 | 800,000 | 940,000 | 400,000 |
| 31 | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | 83102 | நெசவுத் தொழில் நிலையங்களை தாபித்தல் மற்றும் நிருவகித்தல் | 33,000,000 | 28,000,000 | 2,500,000 | 500,000 |

இரண்டாம் அட்டவணை (தொடர்ச்சி)

மதிப்பீடுகள் - 2019

**முற்பணக் கணக்கு விவகாரங்கள்**

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| 32 | அமைச்சுக்கள்/திணைக்களங்கள்<br>கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | விடய இலக்கம் | முற்பணக் கணக்கு வகை | செலவினங்களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை | பற்று நிலுவையின் உச்ச எல்லை | வரவுகளின் உச்ச எல்லை |
| | | 83103 | சிறுகைத்தொழில் நிலையங்களை ஸ்தாபித்தல் மற்றும் நிருவகித்தல் | 7,500,000 | 5,000,000 | 5,000,000 | 1,000,000 |
| 33 | கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார விவகார அமைச்சு | 84002 | மனேரிபிடிய அட்டுலுகம கல்வி அபிவிருத்தி நிலையம் முற்பணக்கணக்குகள் | 19,000,000 | 18,000,000 | 2,000,000 | 500,000 |
| 34 | விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதாரத் திணைக்களம் | 85302 | உந்துகொட கால் நடை அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலைய முற்பணக் கணக்கு | 14,000,000 | 9,000,000 | 500,000 | 200,000 |

மொத்த வருமானம் = ரூபா 31,100,000,000
மொத்த செலவினம் = ரூபா 31,100,000,000
நிலுவை

தம்ம திசாநாயக்க,
கௌரவ ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணம்.

2019, ஏப்பிறல் 10.

**தத்துவ அதிகாரம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆறாம் (6) மாகாண சபையின் பதவிக்காலம் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியுடன் முடிவடைந்துள்ளமையினால் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 27 (அ) ஆம் பிரிவின்படி எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியுடன் ஆரம்பமாகி 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டிற்குள் சம்பிரகமுவ மாகாண சபையின் சேவைச் செலவினங்களுக்காக தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள முப்பத்தோராயிரத்து நூறு மில்லியன் ரூபாவான (ரூபா 31,100,000,000 ) சப்பிரகமுவ மாகாண சபையின் செலவினங்களை சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு அந்த மாகாணத்தின் பிரதான செயலாளருக்கும் கணக்கீட்டு அலுவலர்களுக்கும் இத்தால் உத்தரவளிக்கின்றேன்.

இந்த உத்தரவு சப்பிரகமுவ மாகாணத்தின் (7 )ஆவது மாகாண சபைக்கூட்டம் நடத்துவதற்காக அழைக்கப்படும் திகதியில் அல்லது மாகாண சபையின் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும் திகதியில் அல்லது அத்திகதியில் இருந்து மூன்று (03) மாத கால எல்லை

*முடிடையும் திகதியில் அல்லது 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் அல்லது அவ்விரண்டு தினங்களுள் முதலில் வரும் திகதியில் முடிவடையும்.*

*மேலும் என்னால் 2019 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் செலவினங்களை மேற்கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி உத்தரவளிக்கப்பட்ட வரவு செலவு மதிப்பீடுகளால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களும் இந்த உத்தரவின் படி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டுப் பணத் தொகைகளைக் கொண்டு மீள் நிரப்பிக் கொள்ளல் வேண்டும் என்பதை அறிவிக்கின்றேன்.*

*தம்ம திசாநாயக்க,*
*கௌரவ ஆளுநர்,*
*சப்பிரகமுவ மாகாணம்.*

*2019, ஏப்பிறல் 10.*

**தத்துவ அதிகாரம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆறாம் (6) மாகாண சபையின் பதவிக்காலம் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியுடன் முடிவடைந்துள்ளமையினால் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 27 (அ) ஆம் பிரிவின்படி எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியுடன் ஆரம்பமாகி 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் நிதியாண்டிற்குள் சப்பிரகமுவ மாகாண சபையின் முற்பணக் கணக்கு விவகாரங்களுக்காக தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள (11) ஆம் அட்டவணையின் செலவினங்களை சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு அந்த மாகாணத்தின் பிரதான செயலாளருக்கும் கணக்கீட்டு அலுவலர்களுக்கும் இத்தால் உத்தரவளிக்கின்றேன்.*

*இந்த உத்தரவு சப்பிரகமுவ மாகாணத்தின் (7 )ஆவது மாகாண சபைக்கூட்டம் நடத்துவதற்காக அழைக்கப்படும் திகதியில் அல்லது மாகாண சபையின் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும் திகதியில் அல்லது அத்திகதியில் இருந்து மூன்று (03) மாத கால எல்லை முடிடையும் திகதியில் அல்லது 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் அல்லது அவ்விரண்டு தினங்களுள் முதலில் வரும் திகதியில் முடிவடையும்.*

*மேலும், என்னால் 2019 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின் முற்பணக் கணக்கு விவகாரங்களுக்காக 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள எல்லைகளுக்கிணங்க சேர்ந்த பெறுகைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களும் இந்த உத்தரவின் படி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள எல்லைகளால் மீள்நிரப்பிக் கொள்ளும்படி அறிவிக்கின்றேன்.*

*தம்ம திசாநாயக்க,*
*கௌரவ ஆளுநர்,*
*சப்பிரகமுவ மாகாணம்.*

*2019, ஏப்பிறல் 10.*

*08-318*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*